## ஜமால் முகமது கல்லூரி
(தன்னாட்சி)

Since 1951

ஆற்றல் சார் தனித்தகுதி பெற்றது
தேசியத் தர மதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
திருச்சிராப்பள்ளி – 620 020, தமிழ்நாடு, இந்தியா

பொருண்மை :

# பன்முகத் தளத்தில் தமிழியல்

நாள் : 28.11.2019 (வியாழக்கிழமை)

UGC

முதுகலைத் தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி மற்றும்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் இணைந்து

பல்கலைக்கழக மானியக்குழுவின் தன்னாட்சி நிதியுதவியுடன் நடத்தும்

- பன்னாட்டுக் கருத்தரங்கம் -

## வருகைச் சான்றிதழ்

திரு / திருமதி / செல்வி முனைவர். அ. கல்பனா தேவி
வாவு வஜீஹா மகளிர் கல்லூரி, காயல்பட்டணம் அவர்கள்
'இழுங்கொகையல் அஃறிணை உயிர்களின் இயல்பு'
என்னும் தலைப்பில்
கட்டுரை வழங்கி / பங்கேற்றுச் சிறப்பித்தார்கள் என்று சான்றளிக்கப்படுகிறது

| | | |
|---|---|---|
| முனைவர் க. சிராஜுதீன் | முனைவர் அ. சையத் ஜாகிர் ஹசன் | முனைவர் S. இஸ்மாயில் முகைதீன் |
| கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் & செயலாளர் | தமிழ்த்துறைத்தலைவர் (பொ) கலைப்புல முதன்மையர் | முதல்வர் |

சிறப்பிதழ்
Special Issue

12-கார்த்திகை 2050
28-November 2019

ISSN : 2321-0737

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

# Journal of Classical Thamizh

(A Quarterly International Multilateral Thamizh Journal)

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandrasegaran*

*Editorial Board*
*Dr. S. Kumaran*
*Dr. S. Rajaram*
*Dr. Aranga. Pari*
*Dr. G. Rajagopal*
*Dr. PM. Jamahir*
*Dr. S. Chitra*
*Dr. P. Velmurugan*
*Dr.A. Ekambaram*
*Dr. E.R. Ravichandran*
*Dr. K. Thilagavathi*
*Dr. G. Sheik Meeran*
*Dr. R. Jagadheesan*
*Dr. P. Selvakumar*
*Dr. T. Jegathesan*
*Dr. R.Vijayarani*
*Dr. J. Chandrakala*
*Dr. T.K. Jasmin Sudha*
*Dr. Sinnathamby Santhirasegaram*
*Dr. S. Ramesh*
*Dr. Manivannan Murugesan*
*Dr. A. Rameez*
*Dr. G. Mariappan*
*Dr. K. Manickaraj*

சிறப்பிதழ் :

முதுகலை & தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
(தேசியத் தர மறுமதிப்பீட்டு மூன்றாம் சுற்றில் 'A' தரச்சான்று பெற்றது)
திருச்சிராப்பள்ளி–620 020, தமிழ்நாடு, இந்தியா

அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா

## பன்முகத் தளத்தில் தமிழியல்

**பன்னாட்டுக் கருத்தரங்கம் -2019**

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் க. சிராஜுதீன்**
உதவிப்பேராசிரியர், முதுகலை &தமிழாய்வுத்துறை
ஜமால் முகம்மது கல்லூரி (தன்னாட்சி)
திருச்சிராப்பள்ளி –620 020.

*Published by*
**RAJA PUBLICATIONS**
**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

6 பகுதி-2
சிறப்பிதழ்
Special Issue

| | | |
|---|---|---|
| 61. சா. இளையராஜா | இன்றைய வாழ்வியலில் களவு | 219-222 |
| 62. க. இளையராஜா | கரகத்தின் தோற்றமும் அதன் படிநிலைகளும் | 223-225 |
| 63. ஆ. இன்பன்ட் புஷ்பராஜ் | கங்கணம் புதினத்தில் பாலியல் சிக்கல்கள் | 226-229 |
| 64. பி. இன்னமுது | பழந்தமிழகத்தில் பரத்தையர் | 230-233 |
| 65. தி. ஈஸ்வரி | திருவையாறு வட்டார நிலவியல் அமைப்பு | 234-238 |
| 66. கோ. உமா | பெரியபுராணத்தில் வேளாண் சமுதாயம் | 239-241 |
| 67. ம. உமாமகேஸ்வரி | திருமங்கையாழ்வாரின் சிறிய திருமடலில் அகப்பொருள் | 242-244 |
| 68. த. உஷா நந்தினி நாச்சியார் | மலசரின் உணவு, உடை முறைகள் | 245-247 |
| 69. வெ. உஷா | திருக்குறள் காட்டும் இறைநெறி | 248-250 |
| 70. க. ஏஞ்சல் லதா | நான்மணிக்கடிகை கூறும் இல்வாழ்க்கை நெறி | 251-253 |
| 71. க. ஏஞ்சல் ஜெபமலர் ராணி | சங்க இலக்கியத்தில் காணலாகும் தமிழர் சடங்கு முறைகள் | 254-256 |
| 72. மு. ஏழுமலை | புறநானூற்றில் நிர்வாகவியல் சிந்தனைகள் | 257-260 |
| 73. N. ஐயப்பன் & பா. சிறியபுஸ்பம் | மதுரைக்காஞ்சி கூறும் தொழில்கள் | 261-263 |
| 74. கணேசன். நா | நியூட்ரினோ ஆய்வில் குறிஞ்சியின் பங்கு | 264-267 |
| 75. ப. கணேஷ்வடிவேல் | புறநானூற்றில் மனித உரிமைகள் | 268-271 |
| 76. எஸ். கணேஷ் | வள்ளலாரின் சாதி மறுப்பும் காந்தியடிகளின் சாதி ஒழிப்பும் | 272-275 |
| 77. கு. கண்ணன் | சிறுபஞ்சமூலம் காட்டும் பண்பாட்டுச் செய்திகள் | 276-280 |
| 78. திரு. இரா. கண்ணன் | அகநானூற்றில் பண்பாட்டுப் பதிவுகள் | 281-284 |
| 79. இரா. கண்ணன் | குறுந்தொகையில் மக்கள் வாழ்வியல் | 285-286 |
| 80. அ. கமலம் | பட்டினப்பாலை நான்மணிக்கடிகையில் பொருளியல் சிந்தனை | 287-290 |
| 81. ப. கமலா & இரா. சதாசிவம் | மேல்மலையனூர் அங்காளபரமேஸ்வரி கோயில் வழிபாடும் நம்பிக்கையும் | 291-294 |
| 82. ஆ. கமலா | கலைஞரின் கவிதை மழையில் - இராவணன் பாத்திரப்படைப்பு | 295-299 |
| 83. கோ. கருணாகரன் | குரவைக்கூத்து | 300-303 |
| 84. ச. கலாதேவி | உ.வே.சா. குறுந்தொகை உரை இயல்புகள் | 304-307 |
| 85. த. கலாஸ்ரீதர் | ஆவணங்களில் காணப்படும் கவர்னர்களும், துபாஷிகளும், தமிழகத்தை கொள்ளையடித்த செய்திகள் | 308-311 |
| 86. கோ. கலைச்செல்வி | முகிலை இராசபாண்டியனின் அருகருகே நான்கு வீடுகள் நாவலில் வட்டார வழக்கின் செல்வாக்கு | 312-315 |
| 87. இரா. கலைச்செல்வி | பயிர் முகங்கள் புதினத்தில் முதியோர் சமுதாயம் | 316-318 |
| 88. செ. கலைமணி | முகிலினி நாவல் - ஓர் ஆய்வு | 319-322 |
| 89. ஞா. கலையரசி | பெரியபுராணம் காட்டும் விருந்தோம்பல் | 323-325 |
| 90. கலைவாணி இளங்கோ | திருக்குறளும் சிங்கப்பூர் கல்விக் கொள்கையும் | 326-328 |
| 91. அ. கலைவாணி | சங்க இலக்கியத்தில் மனிதநேய மாண்புகள் | 329-331 |
| 92. இரா. கலைவாணி | கற்றாழை புதினத்தில் மணிமேகலை | 332-337 |
| 93. சி. கலைவாணி | சித்தர்கள் கூறும் சமுதாயச் செய்திகள் | 338-340 |
| 94. அ. கல்பனாதேவி | குறுந்தொகையில் அஃறிணை உயிர்களின் இயல்பு | 341-343 |
| 95. ஆ. கவிதாராணி | கிழக்குக் கடற்கரையில் வணிகம் | 344-347 |
| 96. இரா. கவிதா & த. கருப்பையா | கல்விப் புலத்தில் மகளிரும் பாலியல் பாடுகளும் ('சங்கவை' புதினத்தை முன்வைத்து) | 348-350 |
| 97. இல. கவிதா | சிலப்பதிகாரத்தில் பாடவேறுபாடுகள் | 351-353 |
| 98. ந. கவிதா | தமிழ் இலக்கியங்களில் பல்லுயிரியப் பாதுகாப்பு | 354-356 |
| 99. மு. கவிதா | குறுந்தொகையில் ஐந்நிலத் தலைவி | 357-359 |
| 100. மு. கவிதா | சித்தர்கள் போற்றிய தமிழும் அறக்கோட்பாடுகளும் | 360-363 |
| 101. வா. ச. கவிதா | சிறுபாணாற்றுப்படையில் இனவரைவியல் | 364-366 |
| 102. வீ. கவிதா | காலத்தை வென்ற பரிபாட்டு | 367-368 |
| 103. வை. கவிதா | ஆற்றுப்படை நூல்களில் விருந்தோம்பல் | 369-372 |
| 104. பா. கனிமொழி | தாக்கும் தன்மையறிந்த தமிழர் போர் அரசியல் - திருக்குறளை முன்வைத்து | 373-378 |
| 105. கா. காமாட்சி | சங்கர நமச்சிவாயரின் மேற்கோள் ஆளுமை | 379-381 |
| 106. வெ. காமினி | அகநானூற்றில் வழி அறியலாகும் ஆலமரம் | 382-384 |
| 107. ரா. காயத்ரி | சுந்தர காண்டத்தில் அனுமன் | 385-388 |
| 108. செ. கார்குழலி | பழந்தமிழரின் பண்பும் நவீனப் பண்பும் | 389-392 |
| 109. வேல். கார்த்திகேயன் | திருஞானசம்பந்தர் தேவாரத்தில் சிற்றிலக்கியக் கூறுகள் | 393-397 |
| 110. செ. ர. கார்த்திக் குமரன் | தனிமையின் இரு முகங்களும் இயல் கடந்த இருத்தலும் மொழிபெயர்ப்புப் பிரதிகளை முன் வைத்து... | 398-401 |
| 111. அ. கார்முகிலன் | தொல்காப்பியர் காலக் குலக்குறியீட்டுப் பண்பாடு | 402-404 |
| 112. ஜெ. காவேரி | ஈரோடு தமிழன்பன் கவிதைகள் சுட்டும் தனிமனித வாழ்வியல் சிந்தனைகள் | 405-407 |
| 113. ந. கிருத்திகா | வள்ளுவரும் வாழ்வியலும் | 408-411 |
| 114. க. கிருஷ்ணமூர்த்தி | பழந்தமிழர் சிந்தனையில் ஊழ் | 412-414 |
| 115. தி. நா. கிருஷ்ணமூர்த்தி | பன்முகத் தளத்தில் கம்பன் தமிழ் | 415-417 |
| 116. ப. கிருஷ்ணமூர்த்தி | புறநானூறு காட்டும் கடவுளும் தெய்வமும் | 418-422 |
| 117. தி. கிருஷ்ணவேணி | மருக்கை நாவலில் இடையர் வாழ்வியல் | 423-426 |
| 118. சு. கிருஷ்ணவேணி | திருக்குறள் உணர்த்தும் அறம் | 427-430 |
| 119. அ. கிரேஸி ஜெனோவா | இலக்கியங்களில் கல்வி | 431-434 |
| 120. அ. கிறிஸ்டல் ஷீபா | அகநானூறு குறிப்பிடும் நடுகல் வழிபாடு | 435-436 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

மற்றொன்று:

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Modern Thamizh Research

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN : 2321 - 984X

# குறுந்தொகையில் அஃறிணை உயிர்களின் இயல்பு

முனைவர் அ. கல்பனாதேவி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, வாவு வஜீஹா வனிதையர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
காயல்பட்டணம், தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

தமிழ் இலக்கியங்கள் அவை தோன்றிய காலகட்டத்தின் காலக் கண்ணாடியாக விளங்குகின்றன. அவை அடுத்தடுத்து வரும் கால மக்களுக்கு வழிகாட்டியாக அமைந்து சிறப்புற்று விளங்குகின்றன. இத்தகைய சிறப்பிற்குரிய தமிழ் இலக்கியங்கள் மனித உயிர்கள் பற்றிய செய்திகள் மட்டுமின்றி அஃறிணை உயிர்களின் வாழ்க்கை முறையையும் எடுத்துக் கூறுகின்றன. குறுந்தொகையில் அஃறிணை உயிர்களின் பண்பினை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## குறுந்தொகை

குறுகிய அடிகளை உடைய இந்நூல் குறுந்தொகை என்று பெயர் பெற்றது. 400 பாடல்களை உடையது. 205 புலவர்கள் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுப்பித்தவர் பூரிக்கோ. உரையாசிரியர்களால் அதிகம் மேற்கோள் காட்டப்பெறும் நூல். இந்நூலில் தும்பி, குருகு, குரங்கு, குருவி, பசு, கலைமான், கிளி, புறா, பல்லி, களிறு, வௌவால், அணில், மீன், குதிரை போன்ற உயிர்களின் வாழ்க்கை முறையை தலைவன் தலைவியின் வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி புலவர்கள் பாடியுள்ளனர்.

## தும்பி

மலர்களிலிருந்து தேனை எடுத்து உண்ணும் பண்பினை உடையது தும்பி. அத்தகைய தும்பியிடம் தலைவனானவன் தலைவியின் கூந்தலைப் போன்ற நறுமணம் உள்ள மலர்கள் இருக்கிறதா என்று கேட்கும் போது தும்பியின் வாழ்க்கை முறையினைக் குறிப்பிடுகிறான்.

‘கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!’
(குறு.2: 1)

எனும் வரியில் பல மலர்களிலிருந்து பூந்தாதினைத் தேடி உண்ணும் வண்டு என்று வண்டுகளின் வாழ்க்கை முறையினைத் தலைவன் கூறுகிறான். மேலும் காந்தள் பூக்களின் தேனை உண்ணும் என்பதை,

“............ ......... அலங்குளைக் காந்தள்
நறுந்தாது ஊதும் குறுஞ்சிறைத் தும்பி”
(குறு.239 : 3-4)

எனும் பாடல் வரிகளில் அறியலாம்.

## குருகு

கொக்கு இனம் சார்ந்தது குருகு(நாரை). வங்காப் பறவை. வயல்களிலும் நீர்நிலைகளிலும் கிடைக்கக்கூடிய மீனை உணவாக உட்கொள்ளும் வாழ்க்கை உடையது குருகுப் பறவை. நாரை என்ற பெயரிலும் இலக்கியங்களில் சுட்டப்படுகின்றன. குருகுகள் புன்னை மரத்தில் தூங்கும் என்ற செய்தியை,

‘வதிகுருகு உறங்கும் இன்நிழற் புன்னை’
(குறு. 5: 2)

எனும் வரிகளில் அறியலாம். மேலும் அடைகரையிடத்து உள்ள தாழை நிறைந்துள்ள பெருங்கடலில் உள்ள அலைகளின் ஓசையினால் துயில் கொள்ளும் (303) என்ற செய்தியும் பதிவு செய்யப்பட்டுள்ளது நாரை உணவாகக் கொள்ளும் மீன் வகைகள் பற்றிக் கூறும்போது.

‘ஒழுகுநீா ஆரல் பார்க்கும்’ (குறு.25 : 4)
‘ஆரல் அருந்த வயிற்ற’ (குறு.114 : 4)
‘குருகுகொளக் குறித்த கெண்டை’(குறு.128 : 1)
‘அரும்பு அவிழ் அணிமலர் சிதைஇய
மீன்அருந்தி’ (குறு.349 :1)

எனும் வரிகளில் ஆரல்மீன், கெண்டைமீன் ஆகிய மீன்களை உணவாக உண்டு வாழ்ந்த செய்தி புலப்படுகிறது.

வங்காப் பறவை குழல் இசையினைப் போன்ற இனிய குரல் உடையது. சாம்பல் நிறத்தில் கொக்கு உருவத்தில் பெரிதாகக் காணப்படும். தன் ஆண் பறவையைக் காணாததால் புல்லுறு பற்றிக் கொண்டது என்று வருந்தும் தன்மையை,

"வங்காக் கடந்த செங்காற் பேடை
ஏழால்உற வீழ்ந்தெனக் கணவற் காணாது
குழலிசை குரல குறும்பல அகவும்"
(குறு. 151 : 1-3))

என்ற பாடல் வரிகளில் அறியலாம்.

குரங்கு

குரங்கு இனங்களின் வாழ்க்கைமுறை இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பெண் குரங்குகள் தங்கள் குட்டிகளை அடிவயிற்றில் பொருத்தி வைத்திருக்கும் என்பதை,

"........ ....... உயர்கோட்டு
மகவுடை மந்தி போல" (குறு. 29 : 5-6)

எனும் பாடல் வரிகளில் அறியலாம். கருங்குரங்கின் குட்டிகள் மயிலின் முட்டைகளை வெயிலில் உருட்டி விளையாடும் என்ற செய்தியை,

"கான மஞ்ஞை அறையீன் முட்டை
வெயில்ஆடு முசுவின் குருளை உருட்டும்"
(குறு.38 : 1-2)

எனும் பாடல் வரிகளில் அறியலாம்.
பெண்குரங்குகளின் கைம்மைத்துயர் பற்றி,

"கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றென
கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர்
செகுக்கும்" (குறு. 69 : 1-4)

எனும் பாடல் வரிகளில் ஆண் குரங்கானது தாவும்போது இறந்து விட, பெண் குரங்கு வாழ விரும்பாமல், தன் குட்டிகளை சுற்றத்தாரிடம் அடைக்கலமாகக் கொடுத்து விட்டு உயர்வான மலைப்பத்தில் பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் என்ற கருத்து பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆண் குரங்குகள் மரத்திலிருந்து பழங்களை உதிர்க்க, குட்டிகளை உடைய பெண் குரங்குகள் மரத்தின் கீழிருந்து கனிகளை உண்ணும் என்ற செய்தியை 278 ஆம் பாடல் எடுத்தியம்புகிறது.

பசு

பசுக்கள் தன் இளங்கன்றுகள் மீது கொண்ட அன்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேய்வதற்காக சென்ற பசுக்கள், தம் கன்றுகளின் நினைவு தோன்றியதால் இல்லம் வந்த சேர்கின்றன (108), கன்றுகுட்டிகள் தன் தாயைக் காணும் விருப்பத்தோடு காத்து நிற்கின்றன (132), பசுக்கள் தரக்கூடிய பாலிலிருந்த நெய் உருவாக்கப்பட்டன (213), கன்றுகுட்டி பால் குடித்துக் கொண்டிருக்கும் போது வீட்டுமுற்றத்தில் தினையினை உண்ணும் தாய்ப்பசு (227) ஆகிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. தன்னுடைய கன்றுகள் இன்னும் வரவில்லையே என்ற வருந்தும் பசுவின் துன்பநிலையை,

"பல்ஆ மன்றம் நோக்கி, மாலை
மடக்கண் குழவி அலம் வந்தன்ன"
(குறு. 64 : 2-3)

எனும் பாடல் வரிகளில் அறியலாம்.

குருவி

குருவியின் வாழ்க்கை முறை பற்றிக் கூறும்போது,

"கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ
முன்றில் உணங்கல் மாந்தி, மன்றத்து
எருவின்நுண் தாது குடைவன ஆடி
இல்இறைப் பள்ளீத்தம் பிள்ளையொடு
வதியும்" (குறு. 46 : 2-5)

எனும் பாடல் வரிகளில் கூம்பிய சிறகினை உடைய குருவிகள், முற்றத்தில் காயப்போட்ட தானியங்களை உண்டு, தெருவில் உள்ள புழுதியில் விளையாடியது. மாலைப்பொழுதில் தன குஞ்சுகளோடு தங்கி இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது.

குருவி தன் உணவான தினைக்கதிர்களை தினைப்புனத்திற்குச் சென்று உண்ணுவதாகவும், தலைவி அந்த குருவிகளை விரட்டினாள் என்ற செய்தியும் 'குரீஇ ஓப்புவாள்' (குறு.72 : 5) என்ற வரியில் அறியலாம்.

அன்றில் பறவை

அன்றில் பறவையின் தலையானது நெருப்புப் போன்று சிவந்த தன்மை உடையது. பெண் அன்றில் பறவையானது இறால் மீனைப்போன்ற வளைந்த அலகினை உடையது. தடா மரத்தின் உயர்ந்த கிளைகளில் ஆண் பறவையும் பெண் பறவையும் சேர்ந்து தங்கியிருக்கும் என்று 160 ஆம் பாடல் பதிவு செய்கிறது. பனை மடலில் அன்றில் பறவைகள் தங்கி இருந்து ஒலி எழுப்பும் என்பதை,

"மன்றலம் பெண்ணை மடல்சேர் வாழ்க்கை
அன்றிலும் பையென நரலும்...."
(குறு. 177 : 3-4)

எனும் பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

மான்

கலைமான் தனக்கு நிழலையும், தன் பசிக்கு உணவையும் தேடி உண்ணும். தன் குட்டியின் பசியினைப் போக்கியும், தான் வெயிலைத் தாங்கி, தன் குட்டிகளுக்கு நிழலாகவும் முதிய கலைமான் விளங்கும் என்பதை 213 ஆம் பாடல் பதிவு செய்கிறது. மானினத்தில் ஒன்றான மரைமான் இனிய புளிப்புடைய நெல்லிக்காய்களைத் தின்று சுனைநீரைப் பருகும் தன்மை உடையது என்பதை 317 ஆம் பாடல் மூலம் அறியலாம் வருடைமானின் வாழ்க்கையைப் பற்றி கூறும்போது,

"செவ்வரைச் சேக்கை வருடை மான்மறி
குரைபொழி தீம்பால் ஆர மாந்திப்
பெருவரை நீழல் உகளும்.."(குறு.187:1-3)

எனும் பாடல் வரிகளில், வருடைமான்கள் செங்குத்தான மலைப்பகுதிகளில் வாழும். மான் குட்டிகள் தாயின் மடியில் பால் குடிக்கும். அதன் பின் மலைப்பகுதியின் நிழலில் துள்ளி விளையாடும் என்ற செய்திகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வௌவால்

வௌவால் வலிமையான அழகிய சிறகுகளையும் மென்மையாகப் பறக்கும் தன்மையையும் உடையது. மாலைப்பொழுதில் பழங்கள் இருக்கக்கூடிய மரத்திற்குச் செல்லும்.

'நீலமென்சிறை வள்உகிர்ப் பறவை'
(குறு. 201 : 3)

'கொடுமென் சிறைய கூர்உகிர்ப் பறவை'
(குறு. 352 : 2)

எனும் வரிகளில் வௌவால் கூர்மையான நகங்களையும் மென்மையான சிறகுகளையும் உடையது என்பதை அறியலாம்.

கிளி

கிளியின் உணவுப்பழக்கம் பற்றிக் கூறும்போது,

'வளைவாய் கொண்ட வேப்ப ஒண்பழம்'
(குறு.67 : 2)

எனும் வரியில் வேப்பம்பழத்தை உணவாக உட்கொள்ளும் என்பதையும்,

"புனைவன் நூடவைப் பொன்போல் சிறுதினை
கிளி குறைத்து உண்ட......"(குறு.133:1-2)

எனும் வரிகளில் தினைக்கதிர்களை ஒடித்து உணவாக உட்கொள்ளும் என்ற செய்தியும் வெளிப்படுகிறது.

முடிவுரை

இவ்வாறு அஃறிணை உயிரினங்களின் வாழ்க்கை முறை மட்டுமின்றி உணவுமுறைகள் பற்றியும் குறுந்தொகை நூலில் தெளிவாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மேலும் பல்லி, களிறு, அணில், மீன், குதிரை, கோழி, மயில், பாம்பு போன்ற உயிரினங்கள் பற்றியும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை புலவர்களின் பாடல்கள் வாயிலாக அறியலாம்.

௸